# மன் கி பாத்

## (மனதின் குரல்)

தொகுதி - 2



# மன் கி பாத்

## (மனதின் குரல்)

### தொகுதி - 2

**Authors**
Sharda Mohan and Shashi Mukherjee

**Illustrations and Cover Art**
Dilip Kadam

**Assistant Artist**
Ravindra Mokate

**Production**
Amar Chitra Katha

**Published by**
Amar Chitra Katha Pvt. Ltd

Tamil

ISBN – 978-81-19242-61-0

Amar Chitra Katha Pvt. Ltd, June 2023

© Ministry of Culture, Govt of India, June 2023
All rights reserved. This book is sold subject to the condition that the publication may not be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech or other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

You can now get ACK stories as part of your classroom with **ACK Learn**, a unique learning platform that brings these stories to your school with a range of workshops. Find out more at **www.acklearn.com** or write to us at **acklearn@ack-media.com**.



கோவிட்-19 தொற்று நோயின் மிக மோசமான சூழலில் நாம் வாழ்ந்தோம். நாம் அனைவரும் நீண்ட காலம் குடும்பத்துடன் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த காலம் அது. நம்மில் சிலருக்கு அது நல்ல காலம். நம் பெற்றோர், உடன்பிறந்தோர் மற்றும் நம் வீட்டில் வாழ்வோரை நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் பலருக்கு கடினமாக இருந்தது. எப்படி தினமும் சிலரை பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்வது?

பல ஆண்டுகளாக நம்மை ஒன்றாக வைத்திருந்த சில பாரம்பரியங்களை துரதிஷ்டவசமாக அலட்சியப்படுத்தி இருந்தோம். இவை இல்லாமல் சில குடும்பங்கள் சந்தோஷமாக இருப்பதற்கு பாடுபட்டன.

கதை சொல்லும் பாரம்பரியம் நம்மை ஒன்றாக வைத்திருந்தது. வீட்டின் வயதானவர்கள் கதைகளைச் சொல்லி அனைவரையும் சந்தோஷமாக புத்துணர்வோடு வைத்திருப்பார்கள்.

கதைகள் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றன. ஆன்மா இருக்கும் இடத்தில் ஒரு கதை இருக்கிறது. இளமையில் நான் இந்தியா முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்றேன். நான் எப்போதும் கிராமத்து குழந்தைகளுடன் பழகுவேன். அவர்களிடம் கதை சொல்லச் சொல்வேன்.

அதற்கு அவர்கள், "இல்லை அங்கிள், நாங்கள் உங்களுக்கு ஒரு ஜோக் சொல்வோம், நீங்கள் ஒரு ஜோக் சொல்லுங்கள்" என்று பதிலளிப்பார்கள். இந்தக் குழந்தைகள் கதைகளின் மகிழ்ச்சியை அறியாதது அதிர்ச்சியாக இருந்தது! இந்தியாவில் கதை சொல்லும் பாரம்பரியம் பழங்காலத்திலிருந்து இருக்கிறது. பஞ்சதந்திரம், ஹிதோபதேசம், கிஸ்ஸா கோய்* போன்ற கதைகள். ஞானத்தையும், மதிப்பையும் போதிக்கும் கதைகள்.

இன்று கதை சொல்லும் தளங்களைத் தொடங்கியவர்கள் பலர் உள்ளனர். அமர் வியாஸும் அவரது நண்பர்களும் Gaathastory.in ஐ ஆரம்பித்தனர். வைஷாலி வியாவரே தேஷ்பாண்டே கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் பற்றிய கதைகளைச் சொல்கிறார். பெங்களூரைச் சேர்ந்த விக்ரம் ஸ்ரீதருக்கு காந்தியின் கதைகள் மிகவும் பிடிக்கும். சென்னையைச் சேர்ந்த ஸ்ரீவித்யா வீரராகவன் மற்றும் kathalaya.orgயின் கீதா ராமானுஜம் ஆகியோர் சிறந்த கதைசொல்லிகள்.

மன் கி பாத் என்ற எனது நிகழ்ச்சியிலிருந்து, கதைசொல்லிகள் மற்றும் பல ஊக்கமளிக்கும் நபர்களைப் பற்றிய கூடுதல் கதைகளை நாயர் சாரின் பள்ளியில் கேட்டறிவோம்.



* உருதுவில் கதை சொல்லும் பண்டைய கலை வடிவம் **மகாத்மா காந்தி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கதைகளைப் பற்றி | 3 |
| 2. | வீரேந்திர யாதவ் | 7 |
| 3. | உஷா துபே | 10 |
| 4. | டி. ஸ்ரீனிவாசாச்சார்யா | 13 |
| 5. | அனுதீப், மினுஷா | 15 |
| 6. | சல்மான் | 18 |
| 7. | என்.எஸ். ராஜப்பன் | 20 |
| 8. | சி.வி. ராஜு | 23 |
| 9. | பாகீரதி அம்மா | 26 |
| 10. | ராஜேந்திர ஜாதவ் | 28 |
| 11. | காயத்ரி | 30 |

# கதைகளைப் பற்றி



கோடை விடுமுறை முடிந்து சிறுவர்கள் பள்ளி திரும்புகின்றனர்.
ஹலோ இக்பால்! நான் வரேன். நில்லு!
ஹாய் ஷ்ரேயஸ்! உன்னைப் பார்த்ததில் சந்தோஷம்.
குட் மார்னிங் நாயர் சார்!
குட் மார்னிங், சாரதா. எல்லோருக்கும் வணக்கம்! வழக்கம் போல் உங்கள் அனைவரையும் கடைசி பீரியடில் சந்திக்கிறேன்.
நிறைய கதைகளுடன்?
ஹஹஹா! ஆம், நிறைய கதைகளுடன்.
பிரதமரின் வானொலி நிகழ்ச்சியான மன் கி பாத்தில் இருந்து மிகவும் சுவாரஸ்யமான கதைகளைச் சொல்வதால் நாயர் சார் அனைத்து குழந்தைகளுக்கும் மிகவும் பிடித்தவராக இருந்தார்.
நாள் முடிவில், அவர் வழக்கம் போல் ஒரு பெரிய புன்னகையுடன் நுழைந்தார்.
நாயர் சார், இன்றைய கதை என்ன?
இன்றைய கதை, கதைகளைப் பற்றியது.
அது எப்படி?


நாயர் சார் அனைவரையும் அவர்கள் இருக்கையில் அமரச் சொன்னார்.
ஒருமுறை, ஊரடங்கின் போது பெங்களூர் கதைசொல்லல் சங்கத்தைச் சேர்ந்த கதைசொல்லிகள் குழுவிடம் நமது பிரதமர் பேசினார்.
அபர்ணா ஆத்ரேயா, ஷைலஜா சம்பத், சௌமியா சீனிவாசன், அபர்ணா ஜெய்சங்கர், லாவண்யா பிரசாத் ஆகியோர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்தாலும், கதை சொல்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.
உண்மையில், லாவண்யா பிரசாத் வயதானவர்களுடன் அமர்ந்து அவர்களின் குடும்பங்களுக்காக அவர்களின் கதைகளை எழுதுகிறார்!
ஆம், எனது தாத்தா 15 ஆகஸ்ட் 1947 அன்று சிறு பையனாக இருந்தார், மும்பையில் அவர் சென்ற டிராம் சவாரிகள் அவருக்கு நினைவிருக்கிறது. அன்று அனைத்து சவாரிகளும் இலவசம்!
என் தாத்தா ராணுவத்தில் இருந்தார். அவர் இந்திய-சீனா போரில் பங்கேற்றதைப் பற்றி நிறைய கதைகளை என்னிடம் கூறியுள்ளார்
என் குடும்பத்தாரிடம் இருந்தும் கதைகளை தெரிந்து கொள்ளப் போகிறேன்.
நல்ல யோசனை. நம் குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடமிருந்து கதைகளைச் சேகரித்து, அவற்றை இங்கே வகுப்பில் பகிர்ந்து கொள்வோம். மன் கி பாத் நிகழ்ச்சியில் அன்று கதைசொல்லி ஒருவர் சொன்ன ஒரு கதையை இப்போது சொல்கிறேன்.
சரி! கதையைக் கேட்போம்.


மன்னர் கிருஷ்ணதேவராயருக்கு எரிச்சல் ஏற்பட்டது.
அதே பழைய காய்கறிகள்! புடலை, பூசணி, உருளைக்கிழங்கு! எனக்கு எரிச்சலாக இருக்கிறது. சமையல்காரரிடம் ஏதாவது வித்தியாசமாக செய்யச் சொல்லுங்கள், இல்லையெனில் நான் அவரை தூக்கிலிடுவேன்.
ஐயோ!
ஏழை சமையல்காரன் மன்னனின் ஆலோசகரான தெனாலிராமனிடம் ஓடினான்.
நான் செய்யும் எதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை. என்னைத் தூக்கில் போடப் போகிறார்.
ஷ்! அழுவதை நிறுத்திவிட்டு என் திட்டத்தைக் கேளுங்கள்.
மறுநாள் மதிய உணவு நேரத்தில் -
இது நன்றாக இல்லையென்றால்...
அடடா! அற்புதம்!
இந்த அற்புதமான காய்கறிக்கு என்ன பெயர்?
அரசே, இது கத்தரிக்காய். உங்களைப் போல அரச கிரீடமும் ஊதா நிற ஆடையும் அணிந்திருக்கிறது பாருங்கள்!
இன்று முதல் எனது ராஜ்ஜியத்தில் உள்ள மக்கள் அனைவரும் கத்தரிக்காய் மட்டுமே சாப்பிட வேண்டும்.
என்ன?
திட்டம் வேலை செய்கிறது!


வண்டி வண்டியாக கத்தரிக்காய்கள் ராஜ்யத்திற்குள் கொண்டு வரப்பட்டன. மற்ற அனைத்து காய்கறிகளும் காணாமல் போயின.
கத்தரிக்காய் பலவிதமாக சமைக்கப்பட்டது.
இன்று கத்தரி சாம்பார் செய்துள்ளேன். நாளைக்கு கத்தரி பர்தா. மறுநாள், கத்தரி லட்டு.
நல்லது!
ஆனால், மிக விரைவில் -
இதோ கத்தரிக்காய் பச்சடி, அரசே.
சுவையான கத்தரி பிரியா...
போதும்! இனி கத்தரிக்காய் இல்லை. என் ராஜ்ஜியத்தில் கத்தரிக்காய் இருக்கக் கூடாது!
பின்னர் -
என் பழைய காய்கறிகள் திரும்ப எனக்குக் கிடைத்தது! உங்கள் திட்டம் அருமை!
ஹ ஹ! என் அரசனை எப்படி திருப்திப்படுத்துவது என்று தெரியாமல் நான் எப்படி மந்திரியாக இருக்க முடியும்?

# வீரேந்திர யாதவ்

நாயர் சாரும் அவருடைய மாணவர்களும் டெல்லியில் ஒரு பண்ணைக்கு சென்று கொண்டிருந்தனர்.




*அறுவடை செய்த பிறகு மீதமிருக்கும் செடிகளும் அதன் குப்பைகளும்

*அப்பா




* வைக்கோலை கச்சிதமான பேல்களாக அழுத்தும் இயந்திரம்

^தாவர அல்லது விலங்கு கழிவுகளை எரிப்பதன் மூலம் கிடைக்கும் சக்தி

** விவசாய நடவடிக்கைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்

அடுத்த சில ஆண்டுகளில் வீரேந்திராவின் முயற்சியில் பல விவசாயிகள் இணைந்தனர்.




விரைவிலேயே இரண்டாவது சங்கத்தை ஆரம்பித்து விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் 80 சதவீத மானியம் பெற்றார். குறைந்த செலவு எனில் அதிக லாபம்.

இந்த முயற்சி வெற்றி பெற்ற செய்தி மாநிலம் முழுவதும் பரவியது.




கோடை காலத்தில், தழை அறுவடைக்கு தயாராக இருக்கும் போது, வீரேந்திர யாதவ் அவருக்கு உதவியாக 200க்கும் மேற்பட்டவர்களை பணியமர்த்துகிறார்.







வீரேந்திர யாதவின் கதையைச் சொல்லும் போது, பிரச்சனைக்குரிய கழிவுகளை பயனுள்ள ஆற்றலாகவும், லாபகரமான தொழிலாகவும் மாற்றிய விதம் முன்னுதாரணமானது என்று பிரதமர் கூறினார்.


உஷா துபே
அன்று தில்லியின் வெப்பமான நாள்.
அஹ்... இப்படிப்பட்ட நாளில் பள்ளிக்கு வரவே பிடிக்கவில்லை.
ஆமாம். ஆன்லைன் வகுப்புகள் எவ்வளவோ பரவாயில்லை!
ஆன்லைன் வகுப்புகள் இருந்தபோது, அதைப் பற்றியும் முணுமுணுத்தாய்!
சிலருக்கு ஆன்லைன் வகுப்புகள் நன்றாக இருந்தன. ஆனால் பல குழந்தைகள் பாதிக்கப்பட்டனர்! இன்று, 'கிதாபோன்வாலி தீதி' பற்றி நான் உங்களுக்கு சொல்கிறேன்.
ஹே, ஒரு மன் கி பாத் கதை!
COVID-19 தொற்றுநோய் சமயத்தில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டபோது மத்திய பிரதேசத்தின் சிங்ராலியைச் சேர்ந்த பள்ளி ஆசிரியை உஷா துபே கவலைப்பட்டார்.
ஆன்லைன் வகுப்புகளா? இந்த வகுப்புகளில் கலந்துகொள்வதற்குத் தேவையான சாதனங்களோ இணையத்தளங்களோ நம் பிள்ளைகளிடம் இல்லையே. எப்படிப் படிப்பார்கள்?
அவளுடைய கவலைகள் நியாயமானவை.
உன் வகுப்புகள் எப்படி நடக்கிறது மஹிமா?
எல்லோரும் வீட்டில் இருப்பதால் என்னால் ஆன்லைன் வகுப்புகளில் கவனம் செலுத்த முடிவதில்லை.


உஷா தனது மாணவி மஹிமா சிங்குடன் கலந்துரையாடியது ஒரு சிறந்த யோசனைக்கு வழிவகுத்தது
மஹிமா, குழந்தைகளால் பள்ளிக்கு செல்ல முடியவில்லை என்றால், பள்ளியை அவர்களிடம் கொண்டுபோவோம்.
நீங்கள் என்ன சொல்கிறீர்கள், மிஸ்?
चलता फिरता पुस्तकालय
உஷா தனது ஸ்கூட்டரில் மாணவர்களுக்காக ஒரு நடமாடும் நூலகத்தை அமைத்தார்.
இது நல்ல யோசனை!
உஷாவும் மஹிமாவும் கிராமம் கிராமமாகச் சென்று நூலகம் அமைத்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தனர்.
இந்த பாடப்புத்தகத்தை கொண்டு வந்ததற்கு நன்றி, தீதி!
நமது செரிமான மண்டலத்தில் உணவு எவ்வாறு செரிக்கப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?
ஆம்! இது கடந்த வாரம் எங்கள் ஆன்லைன் வகுப்பில் கற்பிக்கப்பட்டது. ஆனால் இணையம் வேலை செய்யாததால் பெரும்பாலானவற்றை தவறவிட்டு விட்டேன்.
மஹிமா தீதி! இது சரியா?
சரி! வெரி குட்!




*புத்தகங்களோடு இருக்கும் அக்கா

^ தைரியத்துக்கு வணக்கம்

# டி. ஸ்ரீநிவாசாச்சார்யா




*மதத் தலைவர், ஆசிரியருக்கான மரியாதைக்குரிய தலைப்பு
^புனித வார்த்தைகள் அல்லது சொற்றொடர்கள்

**வழிபாடு
^^ தினசரி கோவில் சடங்குகள் பற்றிய புத்தகம்


சீக்கிரமே ஶ்ரீநிவாசாச்சாரியார் 'ராகவ சிம்ஹம்' என்ற பெயரில் சொந்தமாக அச்சகத்தைத் தொடங்கினார். ஆனாலும் -
அப்பா, உங்கள் புத்தகங்களுக்கான ஆர்டர்கள் உலகம் முழுவதிலுமிருந்து வருகின்றன! நமது அச்சு இயந்திரங்களை மேம்படுத்த வேண்டும்.
இந்த புதிய கணினியால் இயக்கப்படும் அச்சு இயந்திரங்கள் அச்சிடுவதற்கு சிறந்தவை.
2000 ஆம் ஆண்டில், ராகவ சிம்ஹம் பிரஸ் டிஜிட்டல் சகாப்தத்திற்கு ஏற்றவாறு அதன் அச்சிடும் முறையை மறுசீரமைத்தது.
ஆனால் ஶ்ரீநிவாசாச்சாரியார் தொடர்ந்து தனது புத்தகங்களை கையால் எழுதிக் கொண்டிருந்தார். ஒரு நாள் -
தாத்தா, புத்தகங்களை எழுத நீங்கள் ஏன் கணினியைப் பயன்படுத்தக் கூடாது?
பயன்படுத்தலாம். ஆனால் எனக்குத் தெரியாதே.
நாங்கள் சொல்லித் தருகிறோம்!
ஶ்ரீநிவாசாச்சாரியார் தனது 80வது வயதில் கணினிக்கு சொந்தக்காரர் என்ற பெருமையைப் பெற்றார்.
மொழியை மாற்ற விரும்பினால் இங்கே க்ளிக் செய்ய வேண்டும்., தமிழ், சமஸ்கிருதம் உட்பட எந்த மொழியிலும் புத்தகங்களை எழுதலாம்.
அருமை. கொஞ்சம் பயிற்சி செய்தால் என் புத்தகங்களை எளிதாக எழுதலாம் என்று நினைக்கிறேன்.
சில வருடங்கள் கழித்து -
தாத்தா, உங்களுக்கு 92 வயதாகிறது. நீங்கள் பண்டைய எழுத்து மட்டுமல்லாமல் நவீன தொழில்நுட்பத்திலும் வல்லவராகி விட்டீர்கள்.
என் குழந்தைகளே, கணினியைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்த உங்களுக்கு நன்றி. நான் கற்றுக்கொள்ள முடிந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.
'மன் கி பாத்' நிகழ்ச்சியில் பிரதமர் கூறியது போல் வயது மற்றும் சூழ்நிலைகள் முக்கியமில்லை. நீங்கள் ஆர்வமாக இருந்தால் கற்றுக் கொண்டேயிருக்கலாம்.

# அனுதீப் மற்றும் மினுஷா






*கர்நாடக மாநிலம் குந்தபுராவில் நண்பர்கள் குழுவால் தொடங்கப்பட்ட தூய்மைப்படுத்தும் இயக்கம். இப்போது பல தன்னார்வலர்கள் தங்கள் ஞாயிற்றுக்கிழமைகளை இந்தத் திட்டத்திற்காக அர்ப்பணிக்கின்றனர்.


சில நாட்களுக்கு பின்னர் -
பரவாயில்லை. கடற்கரையின் பெரும்பகுதியை சுத்தம் செய்து விட்டோம்.
ஆமாம். ஆனால் இன்னும் பலர் நம்முடன் சேர வேண்டும் என்று விரும்புகிறேன்.
என்ன செய்வது என்று எனக்குத் தெரியும்!
அனுதீப் சோஷியல் மீடியாவில் அவர்களின் முன்னெடுப்பைப் பற்றி அறிவித்தார்.
விரைவில் -
நான் மஞ்சுநாத்.
நான் ஹாசன். இந்த தூய்மைப்படுத்தும் இயக்கத்தில் உங்களுடன் இணைந்து கொள்ள இங்கு வந்துள்ளோம்.
அற்புதம்!
விரைவில் பலர் அவர்களுடன் சேர முன் வந்தனர்.
இருவரும் சேர்ந்து கடற்கரையின் 80 சதவீதத்தை சுத்தம் செய்து சுமார் 800 கிலோ குப்பைகளை சேகரித்தனர்.
கடற்கரை எவ்வளவு அழகாக இருக்கிறது என்று பாருங்கள்.
நன்றாக சுவாசிக்கத் தொடங்கி இருக்கிறது.
சில நாட்களுக்குப் பின்னர் -
இதுபோன்ற ஒரு சிறிய துப்புரவு இயக்கம் இத்தகைய கவனத்தைப் பெற முடிந்தால், நாம் இன்னும் நிறைய செய்ய முடியும்! திரைப்பட இரவுகளை ஏற்பாடு செய்யலாம். கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய திரைப்படங்களை நம் மீனவர்களுக்காக திரையிடலாம்.
நிச்சயமாக! நம் பணி இத்துடன் நின்றுவிடவில்லை. உண்மையில், அது இப்போதுதான் தொடங்கி இருக்கிறது.
அனுதீப் மற்றும் மினுஷா தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்கின்றனர். 'ஒன்றாகச் சேர்ந்தால் மாற்றத்தை ஏற்படுத்தலாம்' என்பதுதான் அவர்களின் குறிக்கோள்.

# சல்மான்



ஐயா, விபத்தில் காலை இழந்த என் மாமாவுக்கு ரோபோவின் கால் போன்ற செயற்கைக் கால் கிடைத்தது. ஆனால் அதை வைத்து நடப்பது அவருக்குக் கடினமாக உள்ளது.
ஆம், சுஜித். பழகுவதற்கு சிறிது காலம் ஆகலாம்.
செயற்கை கால் வைத்து போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்.
உண்மைதான் பாருல். உடல் ரீதியான சவால்கள் உள்ளவர்கள் பெரும் வெற்றியை அடைந்துள்ளனர். நடக்க முடியாத நிலையிலும், வெற்றிகரமான தொழிலதிபராக மாறிய சல்மான் பற்றியதுதான் இன்றைய நமது கதை.
உத்தரபிரதேசத்தில் உள்ள ஹமிர்பூர் என்ற கிராமத்தில் சல்மான் பிறந்தார். அவர் மிகவும் இளமையாக இருந்தபோது –
சல்மானுக்கு நல்ல காய்ச்சல். தொடர்ந்து அழுது கொண்டே இருக்கிறான்.
மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம்.
விரைவில் –
போலியோவால் பாதிக்கப்பட்டிருக்கிறான் சல்மான். நாளடைவில் தசைகள் பலவீனமடையலாம். அவனுக்கு நடக்க முடியாமல் போகலாம்.
அவன் எப்படி சமாளிப்பான்?
சல்மானின் கால்கள் பலவீனமடைந்தாலும் அவன் தைரியமாக வளர்ந்தான். அவன் தனது 12 ஆம் வகுப்பு தேர்வுகளை முடித்த போது –
நான் சம்பாதிக்க விரும்புகிறேன் மா. அரசு வேலைக்கு விண்ணப்பிக்கப் போகிறேன்.


எவ்வளவு முயன்றாலும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு நாள் –
யாரும் எனக்கு வேலை தரவில்லையென்றால் நானே ஒரு நிறுவனத்தைத் தொடங்குவேன்.
அடுத்த சில ஆண்டுகளில் கடன் உதவியுடன் சல்மான் செருப்புகள் மற்றும் சோப்பு தயாரிக்க கற்றுக்கொண்டார். டார்கெட் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.
வாருங்கள், செருப்பு எப்படி செய்வது என்று நான் உங்களுக்குக் காட்டுகிறேன்.
நிறுவனம் பிரபலமானது. ஒரு நாள் -
விபத்தில் ஒரு கையை இழந்ததால் எனக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை. நீங்கள் என்னை வேலைக்கு அமர்த்த முடியுமா?
நீங்கள் இங்கே என்ன செய்ய முடியும் என்று பார்க்கலாம். வேலை செய்வதற்கும் வெற்றி பெறுவதற்கும் சமமான வாய்ப்பு நம்மைப் போன்றவர்களுக்கும் உண்டு.
அடுத்த இரண்டு ஆண்டுகளில் சல்மான் உடல்ரீதியான சவால்கள் உள்ள பலரை வேலைக்கு அமர்த்தினார்.
இப்போது எங்களுடன் 30 மாற்றுத்திறனாளிகள் பணிபுரிகின்றனர். இதுபோன்ற இன்னும் பலருக்கு வேலை தருவேன் என்று நம்புகிறேன்.
மன் கி பாத் நிகழ்ச்சியில் சல்மானின் கதையை பிரதமர் சொன்னார்.
சல்மான் பாய், உங்கள் தைரியத்தை பிரதமர் பாராட்டினார்.
உங்களால் எங்களுக்குப் பெருமை.
நன்றி!

# என்.எஸ்.ராஜப்பன்










*கேரளாவின் புகழ் பெற்ற ஏரி


ராஜப்பன் படகோட்ட ஆரம்பித்ததும் –
பிளாஸ்டிக் மீனா? நானும் பார்க்கலாமா ராஜப்பன்?
நிச்சயம்! வா.
விரைவில் –
பார், இன்றைய வருமானம். வா, பிளாஸ்டிக். உன்னை இங்கிருந்து வெளியேற்றுவோம்.
ஓ, இவைதான் பிளாஸ்டிக் மீன்களா?
சில மணி நேரம் கழித்து –
ஏரி இப்போது மிகவும் சுத்தமாக இருக்கிறது. இதை மிகவும் தைரியமாக செய்கிறீர்கள்... இப்படி இருந்தும்...
எப்படி! என் கால்களா? ஆனால் படகு ஓட்டுவது எனக்கு எளிதானது, நான் பிளாஸ்டிக்கை வெளியே எடுத்து அதிலிருந்து சம்பாதிக்கவும் செய்கிறேன்.
மதியம், அவர்கள் உணவு சாப்பிட உட்கார்ந்தனர்.
நீங்கள் எவ்வளவு காலமாக இதைச் செய்கிறீர்கள்? கடினமான வேலை இல்லையா?
ஐந்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால் எனக்கு எந்த புகாரும் இல்லை. ஏரி என் வீடு. அதை சுத்தம் செய்வது மகிழ்ச்சியாக இருக்கிறது.
எவ்வளவு தன்னலமற்றவர்!


பல மணிநேரம் சுத்தம் செய்த பிறகு ராஜப்பன் தனது படகைக் கரையோரம் நிறுத்தினார்.
நீங்கள் இப்பொழுது என்ன செய்வீர்கள்?
நான் பிளாஸ்டிக்கைப் பிரித்து, அது தண்ணீரில் மறுபடி சேராமல் பார்த்துக் கொள்கிறேன். நீ என்னுடன் வர விரும்புகிறாயா?
வருகிறேன்.
விரைவில் –
ராஜப்பன் சார், நாளையும் மறுநாளும் பிளாஸ்டிக் சேகரிப்பில் உங்களோடு இணைந்து கொள்ளலாமா?
நிச்சயமாக. நாம் ஒன்றானால் உண்மையான மாற்றத்தை உருவாக்க முடியும்.
பிரதமர் நரேந்திர மோடி மன் கி பாத்தில் ராஜப்பனைக் குறிப்பிட்டு, பிளாஸ்டிக் மாசிலிருந்து தண்ணீரைப் பாதுகாக்கும் அவரது அயராத முயற்சியைப் பாராட்டினார். விரைவில் –
ராஜப்பன், உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது.
ஐயா, உங்கள் பணியைப் பாராட்ட இந்த புதிய மோட்டார் படகு மற்றும் சக்கர நாற்காலியை உங்களுக்குப் பரிசளிக்க விரும்புகிறோம்.
ராஜப்பன் தனது புதிய மோட்டார் படகு மூலம் வேம்பநாடு ஏரியை மட்டுமின்றி மற்ற ஏரிகளையும் தொடர்ந்து சுத்தம் செய்து வருகிறார்.

# சி.வி. ராஜு




* ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது


ஆனால் ராஜு கல்லூரியில் படித்துவிட்டுத் திரும்பியபோது நிலைமை மாறியிருந்தது.
குழந்தைகள் ஏன் பிளாஸ்டிக் பொம்மைகளுடன் விளையாடுகிறார்கள்?
அவை தயாரிக்க மலிவானவை. கைவினைஞர்கள் வேறு வேலை தேடி வெளியூருக்குச் செல்கின்றனர்.
எட்டிக்கொப்பக பொம்மைகளால் சூழப்பட்ட ராஜுவிற்குள் இருந்த அந்த பிரகாசமான கண்கள் கொண்ட சிறுவன் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தான். அவரை ஏதாவது செய்யத் தூண்டினான்.


கைவினைஞர்களுக்காக 'பத்மாவதி அசோசியேட்ஸ்' என்ற கூட்டுறவு சங்கத்தை நிறுவினார்.
இந்தப் பழமையான கலை நம் கிராமத்தின் இதயம். அதை இறக்க விடப் போகிறோமா?


அவர்கள் பெருமளவில் தயாரிக்கப்பட்ட சுமாரான பிரதிகளுடன் போட்டியிட வேண்டியிருந்தது. ஆனாலும் மனம் தளரவில்லை.
அங்குடு மரம் பொம்மைகள் வடிவமைக்க ஏதுவானது. அதே சமயம் உறுதியானது.
அங்குடு மரத்தை பெற வனத்துறையுடன் இணைந்து செயல்படுவோம்.


உற்பத்தி பெருகியதால், நாடு முழுவதும் உள்ள வர்த்தக கண்காட்சிகளுக்கு ராஜு பொம்மைகளை எடுத்துச் சென்றார்.
சர்வதேச சந்தைக்கு ஒரு பெரிய ஏற்றுமதி ஆர்டரை தர விரும்புகிறேன்.
நமக்கு இது நல்லது.


ஆனால் கொண்டாட்டங்கள் சீக்கிரமே முடிவுக்கு வந்தன. பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன.
பெயிண்டில் ஈயத்தின் தடயங்கள் இருப்பதை கண்டுபிடித்ததாக இது கூறுகிறது.
இந்த நவீன செயற்கை சாயங்களின் பிரச்சனை அதுதான்.
பாரம்பரிய முறைகளுக்கு திரும்ப வேண்டிய நேரம் இது.




*புவியியல் குறியீடு. ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, நாட்டையோ சார்ந்த தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு வழங்கப்படும் குறியீடாகும்.

^இந்தியாவில் நான்காவது உயரிய குடிமகன் விருது

# பாகீரதி அம்மா



ஒரு நல்ல செய்தி! நான் விரைவில் தாவர உயிரியல் தேர்வுகளை எழுதப் போகிறேன். இனி நாம் இயற்கை நடைப்பயணம் செல்லும்போது செடிகள் கொடிகளைப் பற்றி நான் உங்களுக்கு கற்பிக்க முடியும்.
இன்னும் படிக்கிறீங்களா சார்? அது எப்படி சாத்தியம்?
படித்த ஆசிரியர்கள் மறுபடி படிக்க முடியும் என்று எனக்குத் தெரியாது!
நிச்சயமாக பெரியவர்கள் படிக்கலாம். சமீபத்தில் மன் கி பாத் நிகழ்ச்சியில், தேர்வு எழுதிய 105 வயது முதியவரைப் பற்றி கேள்விப்பட்டேன்.
ஆமாம் சாரதா. அவர் பெயர் பாகீரதி அம்மா. உட்காருங்கள்,. அவரின் கதையை உங்களுக்கு சொல்கிறேன்.
கேரளாவின் பிராக்குளம் கிராமத்தில் வசித்து வந்தவள் பாகீரதி. அவள் படிக்கவும் எழுதவும் விரும்பினாள். ஆனால் அவளுக்கு எட்டு வயதாகும் போது அவளுடைய தாயார் இறந்துவிட்டார்.
நீ பள்ளிக்கு வரவில்லையா பாகீரதி?
நான் படிக்க விரும்புகிறேன்.
இல்லை. இப்போது அவள் வீட்டையும் அவளுடைய உடன்பிறப்புகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.
பாகீரதியால் மீண்டும் பள்ளிக்கு செல்ல முடியவில்லை. அவள் திருமணமாகி ஆறு குழந்தைகளைப் பெற்றாள். பின்னர் அவரது கணவர் இறந்து விட்டார்.
எதுவானாலும் உங்கள் கல்வி பாதிக்கக் கூடாது.
கஷ்டப்பட்டுப் படித்து உன்னைப் பெருமைப் படுத்துவோம் அம்மா!
அவளுடைய குழந்தைகள் வளர்ந்தவுடன் –
இந்தப் புத்தகத்தை நான் படிக்கலாமா? எனக்குப் புரியவில்லை என்றால் நீங்கள் எனக்கு உதவுவீர்களா?
நிச்சயமாக அம்மா.
அம்மா இந்தப் புத்தகத்தை முதலில் படியுங்கள். வெகு சுவாரஸ்யம்.


பாகீரதி அம்மாவின் படிக்கும் ஆசை நிறைவேறாமல் இருந்தது. 2019 இல், அவள் 105 வயதாக இருந்தபோது –
பாருங்க அம்மம்மா, கேரள மாநில எழுத்தறிவு மிஷன் கல்வியை முடிக்க முடியாத பெரியவர்களுக்காக ஒரு திட்டத்தை வழங்குகிறது!
நான் படிக்கலாமா? நல்ல வாய்ப்பு!
வயதாகிவிட்டாலும் பாகீரதி அம்மா படிக்க முடிவு செய்தார்.
எனக்கு படிக்க நிறைய இருக்கிறது. நான் நன்றாகப் படிக்க வேண்டும்.
உங்களால் முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் அம்மம்மா., நாங்கள் அனைவரும் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறோம்.
பல மாதங்கள் கடின உழைப்பிற்குப் பிறகு, பாகீரதி அம்மா கணிதம், மலையாளம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் ஆகியவற்றில் தேர்வுகளை எழுதினார்.
விரைவில் –
அம்மம்மா, சூப்பர்! நீங்கள் 275க்கு 205 மதிப்பெண்கள் எடுத்திருக்கிறீர்கள்!
நான் சொன்னேன் இல்லையா! எனக்கு வயதாகி இருக்கலாம். ஆனால் கற்றல் மீதான எனது ஆர்வம் இன்னும் இளமையாகவே உள்ளது.
2019 ஆம் ஆண்டில் பாகீரதி அம்மாவுக்கு இந்தியாவின் பெண்களுக்கான மிக உயர்ந்த குடிமகள் விருதான நாரி சக்தி புரஸ்கார் வழங்கப்பட்டது.
मन की बात
வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று விரும்பினால் நமக்குள் இருக்கும் மாணவர் ஒருபோதும் இறக்கக்கூடாது.

# ராஜேந்திர ஜாதவ்


கோவிட் மூலம் இனி பெரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்பதில் உங்களுக்கு மகிழ்ச்சி இல்லையா?
ஆமாம் சார்! எங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உழைத்த அனைத்து மக்களுக்கும் நன்றி.
உண்மை! மிகவும் கடினமாக உழைத்த சுகாதார ஊழியர்களுக்கு நாம் மிகவும் கடன்பட்டிருக்கிறோம். ராஜேந்திர ஜாதவின் கதையைச் சொல்கிறேன்.
மன் கி பாத் கதையா?
நாயர் சார் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினார்.
2022 ஆம் ஆண்டில், மகாராஷ்டிராவின் சதானாவில், 62 வயதான ஒருவர் அச்சத்துடன் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.
..., நாசிக் கோவிட்-19 சிவப்பு மண்டலமாக மாறியுள்ளது.
எனது நகரம் ஆபத்தில் உள்ளது.
அவர் ராஜேந்திர ஜாதவ். விவசாய உபகரணங்களை தயாரிப்பதில் பல வருட அனுபவம் உள்ளவர்.
உங்கள் கைகளை கழுவுங்கள், முகமூடியை அணிய மறக்காதீர்கள்!
சிறிய அளவிலான சுத்திகரிப்பு போதாது. இந்த வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த பெரிய அளவிலான ஒன்று தேவை.




*NIF என்பது தொழில்நுட்பத்தில் கண்டுபிடிப்புகளை ஆதரிக்கும் ஒரு அமைப்பாகும்.




*இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி




*காயத்ரியின் தந்தை காசிலிங்கம் ஒரு மெக்கானிக்கல் இன்ஜினியர்.


இந்தப் பட்டைகள் மூலம் வீராவின் சேணத்தில் சக்கரங்களை இணைக்கலாம். ஆனால் பிவிசி குழாய் எதற்காக?
வீராவுக்கு நடக்கவும் ஓடவும் வசதியாக குழாய்களைக் கொண்டு செயற்கைக் கால்களை உருவாக்குகிறேன்.
அருமை. வீராவுக்கு வசதியாக குழாய் அவனது உடலை சந்திக்கும் இடத்தில் மெத்தென்று ஒரு பேடிங் தருகிறேன்.
விரைவில் -
நாய் வண்டியை சோதிக்க வேண்டிய நேரம் இது. சும்மா இரு வீரா!
ஒரு சில நாட்கள் பயிற்சிக்குப் பின் -
வீரா ஓடுவதைப் பார்!
வசதியாக ஓடுகிறான்.
துடிப்பாக இருக்கிறான்.
நன்றி! நிறைய கஷ்டப்பட்டிருக்கிறான்.
பலர் இம்மாதிரி ஊனமான மிருகங்களை தத்தெடுக்க முன்வரவேண்டும் என்று காயத்ரி விரும்புகிறார்.



# மன் கி பாத்

## (மனதின் குரல்)

மன் கி பாத்தின் இரண்டாவது தொகுதி ஒருவரின் சக்தியைக் கொண்டாடுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி தனது வானொலி நிகழ்ச்சியில் தங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்த பல ஆண்களையும் பெண்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இவை நிஜ வாழ்க்கை ஹீரோக்களின் கதைகள்.

சிறுவயதில் தன் உடன்பிறந்தவர்களைக் கவனித்துக் கொள்வதற்காகப் பள்ளியிலிருந்து விலக்கப்பட்ட பாகீரதி அம்மா. வயதான பின் படித்து படித்து, 105 வயதில் நான்காம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

என். எஸ். ராஜப்பன் தனது ஐந்தாவது வயதில் போலியோவால் தாக்கப்பட்டாலும், தனது 63வது வயதில் வேம்பநாடு ஏரியில் சுற்றுலாப் பயணிகள் குவித்த பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் பாக்கெட்டுகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டார்.

உஷா துபே, கோவிட் லாக்டவுனின் போது ஏழைக் குழந்தைகளுக்கு ஆன்லைன் வகுப்புகள் சாத்தியமில்லை என்பதை உணர்ந்தார். எனவே, தனது ஸ்கூட்டரில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் வீடுகளுக்குச் சென்று பாடம் நடத்தினார்.

மாற்றத்தை ஏற்படுத்த பெரும் பணமோ பதவியோ தேவையில்லை என்று இந்த ஹீரோக்கள் நிரூபிக்கிறார்கள்.



₹90

www.amarchitrakatha.com
ISBN 978-81-19242-61-0
9 788119 242610